# காவலிலுள்ள ஆவிகளும் கர்த்தரின் ஆவியும்


## வேத ஆராய்ச்சியாளர் எம்.எஸ்.வசந்தகுமார்


வேதாகமத்திலேயே அதிக சர்ச்சைக்குரியதும், புரிந்துகொள்வதற்கு மிகவும் சிரமமானதுமான வேதப்பகுதியாக இருப்பது 1பேதுரு 3:18-20 ஆகும்.[1] இதனால்தான், கி.பி.16ஆம் நூற்றாண்டில் சபையில் சீர்திருத்தத்தை ஏற்படுத்திய மார்ட்டின் லூத்தரே, பேதுரு இவ்வசனங்களில் எழுதியுள்ளதை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாமல் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.[2] ஏனெனில், இவ்வசனங்களில் இயேசுகிறிஸ்து "காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்ததாகக்" குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், அவர் எப்பொழுது? எந்த ஆவிகளுக்கு? எப்படி? எதனைப் பிரசங்கித்தார்? என்று பலதரப்பட்ட கேள்விகள் கேட்கப்படுவது மாத்திரமல்ல, இதுவரையில் இத்தகைய கேள்விகளுக்கு 180 வித்தியாசமான பதில்கள் கொடுக்கப்பட்டுள்ளன.[3] ஆனால், இத்தகைய கேள்விகளுக்கான சரியான பதிலை அறிந்துகொள்வதற்கு, "மாம்சத்திலே கொலையுண்டு ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" (1பேது.3:18) என்னும் வாக்கியத்தின் அர்த்தத்தை முதலில் நாம் அறிந்துகொள்ளவேண்டியது அவசியம். ஏனெனில், "உயிர்ப்பிக் கப்பட்ட ஆவியிலேயே" இயேசுகிறிஸ்து காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்ததாக 19ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும், "மாம்சத்தில் கொலையுண்டு" என்னும் சொற்பிரயோகம் இயேசுகிறிஸ்து சரீரப்பிரகாரமாகக் கொல்லப்பட்டு (சிலுவையில் அறையப்பட்டு) மரித்ததை அறியத்தந்தாலும், "ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்" என்னும் சொற்பிரயோகம் கிறிஸ்தவர்களினால் வித்தியாசமாகப் புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. இதனால்தான், சில வேதாகமங்களில், "பரிசுத்த ஆவியானவர் இயேசுகிறிஸ்துவை உயிர்ப்பித்தார்" என்னும் அர்த்தத்தில் இவ்வாக்கியத்தை "ஆவியினாலே உயிர்ப்பிக்கப்பட்டார்" என்று மொழிபெயர்த்துள் ளனர்.[4] ஆனால், மூலமொழியின் இலக்கண அமைப்பு முறையின்படி, பெரும்பாலான வேதாகமங்க ளில் குறிப்பிடப்பட்டுள்ள விதமாக, "ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டார்" என்றே இச்சொற்பிரயோகம் மொழிபெயர்க்கப்பட வேண்டும். ஏனெனில், இவ்வசனத்தில் இயேசுகிறிஸ்துவின் சரீர வாழ்வுக்கும் உயிர்த்தெழுந்து ஆவிநிலையில் இருப்பதற்கும் இடையிலான வேறுபாட்டையே பேதுரு சுட்டிக்காட்டியுள்ளார்.[5] அதாவது, உயிர்த்தெழுதலுக்கு முன்பும், அதன் பின்பும் இயேசுகிறிஸ்து இருந்த நிலையையே இவ்வாக்கியம் அறியத்தருகின்றது.[6] மேலும், இத்தகைய முறையிலேயே ரோமர் 1:5லும், 1தீமோத்தேயு 3:16லும் இயேசுகிறிஸ்துவின் வாழ்வில் மாம்சப்பிரகாரமான வாழ்வும் ஆவிக்குரிய பிரகாரமான வாழ்வும் குறிப்பிடப்பட்டுள்ளது.[7]

உண்மையில், இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் "ஆவிக்குரியது" என்றே பேதுரு குறிப்பிட்டுள்ளார். அதாவது, சரீரப்பிரகாரமாக மானிட வரையறைகளுக்கு உட்பட்டவராக இருந்த

---

[1] 1பேதுரு 3:18-20இல், "ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார். அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்த போது, கீழ்ப்படியாமற்போனவைகள். அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப் பேர் மாத்திரம் காக்கப்பட்டார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[2] M.Luther, *Commentary on Peter and Jude*, p. 166.

[3] M.J.Erickson, "Is There Opportunity for Salvation After Death?" In *Bibliotheca Sacra*. 152 (1995), p. 137. (131-144)

[4] ஆங்கிலத்தில் CSB, KJV, NKJV, ISV என்னும் மொழிபெயர்ப்புகள்.

[5] J.R.Michaels, *1Peter: Word Biblical Commentary Volume 49*, p. 204.

[6] O.S.Brooks, "1Peter 3:21 – The Clue to the Literary Structure of the Epistle" In *Novum Testamentum*. 16 (1974), pp. 290-305; K.H.Jobes, *1Peter: Baker Exegetical Commentary on the New Testament*, p. 240; P.J.Achtemeier, *1Peter: Hermeneia Bible Commentary*, p. 249; E.Clowney, *1Peter, The Bible Speaks Today Commentary*, p. 158; W.J.Dalton, *Christ's Proclamation to the Spirits*, p. 14; P.H.Davids, *1 Peter: The New International Commentary on the New Testament*, p. 138; D.E.Hiebert, "The Suffering and Triumphant Christ: An Exposition of 1Peter 3:18-22" In *Bibliotheca Sacra*. 139 (1982), p. 149; D.G.Horrell, *Epistles of Peter and Jude: Epworth Commentaries*, pp. 70-72; J.H.Elliott, *1Peter: Anchor Bible Commentary*, p. 647; L.Goppelt, *A Commentary on 1Peter*, p. 253; J.R.Michaels, *1Peter: Word Biblical Commentary Volume 49*, p. 205; M.William, "He descended into Hell? An Issue of Confessional Integrity" In *Presbyterian*. 25(1999),p.85

[7] Kittel, *Theological Dictionary of the New Testament Volume 6*, pp. 417, 447; E.A.Blum, *1,2 Peter: Expositor's Bible Commentary*, p. 242.

இயேசுகிறிஸ்து, இத்தகைய வரையறைகள் நீக்கப்பட்ட நிலையில் உயிர்த்தெழுந்தார் என்பதே இவ்வாக்கியத்தின் அர்த்தமாகும்.[8] இதனால்தான், திருவிவிலியத்தில் “ஆவிக்குரிய இயல்புடையவராய் உயிர்பெற்றெழுந்தார்” என்று இவ்வாக்கியம் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதாவது, உயிர்த்தெழுந்த பின்பும் இயேசுகிறிஸ்து சரீரத்திலேயே இருக்கின்ற போதிலும், இச்சரீரம் மாம்ச சரீரத்தின் வரையறைகள் எதுவும் இல்லாத ஆவிக்குரிய சரீரமாக உள்ளது. இதனால்தான், இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்னர் கதவுகள் பூட்டப்பட்டிருந்த அறைக்குள் செல்லக்கூடியவராகவும், மனிதருடைய கண்களுக்குத் தென்படக்கூடிய விதத்தில் தோன்றி பின்னர் மறையக் கூடியவராகவும் இருந்தார் (யோவா.20:19, 20:26).[9] அதாவது, அவர் மனிதனாக இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன்பிருந்த ஆவிக்குரிய நிலையில், ஆனால், மகிமையடைந்த சரீரத்துடன் இப்பொழுது இருக்கின்றார். எனவே, 1பேதுரு 3:19இல், “அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்” என்னும் கூற்றில், “அந்த ஆவியிலே” என்பது, அவர் “ஆவிக்குரிய நிலையில் பிரசங்கித்ததைப்பற்றிய” குறிப்பாகவே உள்ளது.[10] இதனால்தான், பரிசுத்த பைபிளில் இவ்வசனம் “இந்த ஆவி நிலையிலேயே சென்று பிரசங்கித்தார்” என்றும், ராஜரீகம் என்பவருடைய மொழிபெயர்ப்பில் “அந்த ஆவி நிலையில் அவர் காவலிலுள்ள ஆவிகளிடம் போய் உரையாற்றினார்” என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இயேசுகிறிஸ்து ஆவிக்குரிய பிரகாரம், அதாவது ஆவி நிலையில் செய்த பிரசங்கத்தைப்பற்றியே 19ஆம் வசனத்தில் பேதுரு குறிப்பிட்டுள்ளார் என்றாலும், அவர் எக்காலத்தில் இவ்வாறு பிரசங்கம் பண்ணினார் என்பதைப்பற்றியும் ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் கருத்து முரண்பாடுகள் உள்ளன. எனினும், சில ஆதி சபைத் தலைவர்களினதும் பாரம்பரிய சபைகளினதும் தவறான ஒரு உபதேசத்தின் செல்வாக்கு காரணமாகத் தற்காலத்தில் பெரும்பாலான கிறிஸ்தவர்கள், இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவை மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் செய்த பிரசங்கத்தைப்பற்றியே பேதுரு குறிப்பிட்டுள்ளதாகக் கருதுகின்றனர்.[11] ஆனால், மாம்சத்தில் கொலையுண்டு ஆவியில், அதாவது ஆவிக்குரிய நிலையில் உயிர்ப்பிக்கப்பட்ட இயேசுகிறிஸ்து “ஆவிகளுக்குப் பிரசங்கித்தார்” என்று இவ்வசனங்கள் கூறுகின்றனவே தவிர, அவர் தம்முடைய மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் பிரசங்கித்தார் என்று இவ்வசனங்களில் குறிப்பிடப்படவில்லை. மேலும், இத்தகைய உபதேசத்திற்கு வேதாகமத்தில் எவ்வித ஆதாரமும் இல்லை. ஏனெனில், இயேசுகிறிஸ்துவின் மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் அவருடைய சரீரம் கல்லறையில் வைக்கப்பட்டிருந்தது (லூக்.23:52-53).[12] ஆனால் அவரது ஆவியோ பரலோகத்தில் தேவனிடம் இருந்தது (லூக்.23:46).[13] எனினும், சில கிறிஸ்தவர்கள், சிலுவையில் அறையப்பட்ட கள்ளனிடம், “இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசில் இருப்பாய்” (லூக்.23:43) என்று இயேசுகிறிஸ்து கூறியதினால், அவர் மரணத்தின் பின் பரதீசிக்குச் சென்று ஆவிகளுக்குப் பிரசங்கித்தார் என்று எண்ணுகின்றனர்.[14] ஆனால், யூதர்களுடைய மொழிவழக்கில் பரதீசு என்பது பரலோகத்தைக்

---

[8] N.Hillyer, *1 and 2 Peter: New International Biblical Commentary*, pp. 113-114; J.N.D.Kelly, *The Epistles of Peter and Jude: Black’s New Testament Commentary*, p. 151.

[9] யோவான் 20:19இல், “வாரத்தின் முதல்நாளாகிய அன்றையத்தினம் சாயங்காலவேளையிலே, சீஷர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்” என்றும், யோவான் 20:26இல், “மறுபடியும் எட்டு நாளைக்குப் பின்பு அவருடைய சீஷர்கள் வீட்டிக்குள்ளே இருந்தார்கள். தோமாவும் அவர்களுடனேகூட இருந்தான். கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார்” என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

[10] W.Grudem, *1Peter: Tyndale New Testament Commentary*, pp. 156-157; J.R. Michaels, *1Peter: Word Biblical Commentary Volume 49*, p. 206; J.N.D.Kelly, *Epistles of Peter and Jude: Black’s New Testament Commentary*, p. 152.

[11] B.Reicke, *The Disobedient Spirits and Christian Baptism*, pp. 116-118; E.Best, *1Peter: New Century Bible Commentary*, p, 140; L. Goppelt, *A Commentary on 1 Peter*, pp. 255-263; C.E.B.Cranfield, *I&II Peter: Torch Bible Commentary*, p. 91.

[12] லூக்கா 23:52-53இல், “அவன் பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டு, அதை இறக்கி, மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, கன்மலையில் வெட்டப்பட்டதுமாய் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்படாததுமாய் இருந்த ஒரு கல்லறையிலே வைத்தான்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[13] லூக்கா 23:46இல், “இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார். இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

[14] பரதீசு என்னும் சொல், “மதிலுள்ள தோட்டம்” என்று பாரசீக மொழியில் அர்த்தந்தரும் சொல்லிலிருந்து கிரேக்கத்திற்குள் வந்த “பரடீய்சொஸ்” என்னும் கிரேக்கச் சொல்லின் தமிழ் வடிவமாகும் (E.Robinson, *Greek and English Lexicon of the New Testament*, p. 547).

குறிப்பிடும் செற்களில் ஒன்றாகவே இருந்தது.[15] இதனால்தான், “இன்றைக்கு நீ என்னுடனேகூட பரதீசிலிருப்பாய்” (லூக்.23:43) என்று கள்ளனிடம் கூறிய இயேசுகிறிஸ்து தம்முடைய ஆவியைப் பிதாவிடம் ஒப்புக்கொடுத்தார் (லூக்.23:46). எனவே, மரணத்திற்கும் உயிர்த்தெழுத லுக்கும் இடைப்பட்ட காலத்தில் இயேசுகிறிஸ்துவின் ஆவி பிரசங்கிக்கச் சென்றது என்று எவ்விதத்திலும் கூறமுடியாது.

இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவை மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் மரித்தோரின் ஆவிகளுக்குப் பிரசங்கித்தார் என்று கூறுபவர்கள், முன்னுக்குப்பின் முரணான கருத்துடையவர்களாகவும் வேதாகம சத்தியத்தை முரண்படுத்தும் உபதேசங்களைப் போதிப்பவர்களாகவுமே இருக்கின்றனர். ஏனெனில், வேதாகம சத்தியத்தின்படி மரணத்தின் பின்னர் மனந்திரும்புவதற்கு எவருக்கும் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை என்பதை, லாசருவையும் ஐசுவரியவானையும் பற்றிய உவமையில் இயேசுகிறிஸ்து தெளிவாகத் தெரிவித்துள்ளார். (லூக்.16:26).[16] மேலும், மனிதர் ஒரு தரம் மரிப்பதும் பின்பு நியாயத்தீர்ப்படைவதும் அவர்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது என்றே வேதாகமம் கூறுகிறது (எபி.9:27). இதனால், மரணத்தின் பின் மனந்திரும்புவதற்கு எவருக்கும் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை என்பது தெளிவாகின்றது. அப்படியிருந்தும், இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆவிகளுக்குப் பிரசங்கம் பண்ணினார் என்று கூறுபவர்களில் சிலர், “மரித்தவர்கள் மனந்திரும்புவதற்கு இன்னுமொரு சந்தர்ப்பத்தைக் கொடுப்பதற்காக இயேசுகிறிஸ்து அவர்களுக்குப் பிரசங்கித்தார்” என்று போதிக்கின்றனர்.[17] மேலும், மனிதர்களுக்கு மாத்திரமல்ல, விழுந்துபோன தூதர்களுக்கும் மனந்திரும்புவதற்குச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டதாகவும் சிலர் கூறுகின்றனர்.[18] எனினும், சிலர் இதைப் பூமியில் வாழ்ந்த காலத்தில் கடுமையான பாவங்களைச் செய்யாதவர்களுக்கு மாத்திரம் வரையறை செய்துள்ளார்.[19] ஆனால், பூமியில் வாழ்ந்த காலத்தில் சுவிசேஷத்தைக் கேட்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காதவர்களுக்கும், சுவிசேஷத்தைச் சரியாகக் கேட்காதவர்களுக்கும் மரணத்தின் பின்னர் கொடுக்கப்பட்ட சந்தர்ப்பமாகச் சிலர் இதைக் கருதுகின்றனர்.[20] ஏனையவர்கள், இத்தகைய சந்தர்ப்பம் நோவாவின் காலத்தில் மனந்திரும்பாமற் போனவர்களுக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டதாகக் கருதுகின்றனர்.[21] எனினும் சிலர், இதை பாவம் செய்த தூதர்களுக்கு செய்யப்பட்ட பிரசங்கமாகவும் குறிப்பிட்டுள்ளனர்.[22] இவ்வாறு ஒன்றையொன்று முரண்படுத்தும் விளக்கங்கள், வேதாகம சத்தியத்தை முரண்படுத்தும் தவறான போதனைகளாகவே உள்ளன.

நோவாவின் காலத்தில் கீழ்ப்படியாமற் போனவர்களின் ஆவிகளுக்கே இயேசுகிறிஸ்து பிரசங்கம் பண்ணினார் என்று 20ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதைக் கருத்திற்கொள்ளாமல் இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில்

---

[15] கிரேக்க மொழியில் பரதீசு என்னும் சொல் “மனங்கவர் தோட்டம்” அல்லது “பூங்கா” என்னும் அர்த்தமுடையது. இத்தகைய அர்த்தத்திலேயே பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பில் இச்சொல் ஆதாமும் ஏவாளும் குடியிருந்த தோட்டத்தைக் குறிப்பிட உபயோகிக்கப்பட்டுள்ளது (C.Brown, *The New International Dictionary of New Testament Theology Volume 2*, pp. 760-771). ஆனால், இரண்டு ஏற்பாடுகளுக்கும் இடைப்பட்ட காலத்தில் மரணத்தின் பின் நீதிமான்கள் செல்லும் இடத்திற்கு அல்லது தேவன் இருக்கும் இடத்திற்கு இப்பெயர் கொடுக்கப்பட்டது (*1Enoch*. 40:7-8, 40:23, 60:7, 60:23, 70:4, *2Enoch*. 9:1, 42:3, *Apocalypse of Abraham*. 21:6-7, *Testament of Abraham*. 20:14, *Apocalypse of Moses*. 37:5, 40:2). இதனால்தான், யூதர்களுடைய நூல்களில் தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கும் ஆசீர்வாதமான நிலையை, குறிப்பாகப் பரலோகத்தைக் குறிப்பிட பரதீசு என்னும் சொல் உபயோகிக்கப்பட்டது (G.Kittel & G.Friedrich, ed., *Theological Dictionary of the New Testament Volume 1*, pp. 657-658; W.Grudem, *Systematic Theology: An Introduction to Biblical Doctrine*, p. 593).

[16] மரணத்தின் பின்னர் மனிதருக்கு என்ன நடக்கின்றது என்பதை முழுமையாக அறிந்துகொள்வதற்கு எனது “மரணத்தின் மறுபக்கம்” “மரித்தோரின் ஆவிகளினால் மண்ணுலகுக்கு வரமுடியுமா?” என்னும் நூல்களைப் பார்க்கவும்.

[17] C.Pinnock, *A Wideness in God’s Mercy*, p. 168; J.W.C.Wand, *Epistles of Peter and Jude: Westminster Commentaries*, pp. 111-112.

[18] A.T.Hanson, “Salvation Proclaimed:1Peter 3:18-22” In *Expository Times*. 93 (1982) pp. pp. 100-105.

[19] Cyril of Alexandria, *1-2 Peter: Ancient Christian Commentary on Scripture*, pp. 107-108.

[20] J.Lange, *The First Epistle General of Peter*, pp. 66-67.

[21] C.E.B. Cranfield, “The Interpretation of 1Peter iii.19 and iv.6” pp. 369-372.

[22] W.W.Wiersbe, *Be Hopeful: An Exposition of 1Peter*, p. 92; J.MacArthur, *The John MacArthur Bible Commentary*, p. 1915; E.Best, *1Peter; The New Century Bible Commentary*, pp. 140-146.

பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுக்குப் பிரசங்கித்து,[23] அவர்களுக்கு சத்தியத்தை முழுமையாக அறிவித்து,[24] அவர்களை விடுவித்தார் என்று கூறுவது வேதாகமத்தின் போதனை அல்ல. ஏனெனில், வேதாகமத்தில் சேர்த்துக்கொள்ளப்படாத யூதர்களுடைய நூல்களின் செல்வாக்கினாலேயே இத்தகைய போதனைகள் கிறிஸ்தவர்களினால் உருவாக்கப்பட்டுள்ளன. இதனால், ஆவிகளுக்குப் பிரசங்கித்தது இயேசுகிறிஸ்து அல்ல என்றும், ஏனோக்கே இப்பணியைச் செய்தார் என்றும்கூட சிலர் கூறுகின்றனர்.[25] ஏனெனில், வேதாகமத்தில் சேர்த்துக் கொள்ளப்படாத நூல்களிலேயே ஏனோக்கு இப்படி ஒரு பணியைச் செய்துள்ளதாக ஒரு கற்பனைக் கதை உள்ளது. அதாவது, "முதலாம் ஏனோக்கு" என்னும் புத்தகத்தில், மானிடப் பெண்களை இச்சித்து அவர்களுடன் உறவுகொண்டதினால் விழுந்துபோன தூதர்களின் மீதான தேவ தண்டனையை அறிவிப்பதற்காக அவர்கள் இருக்குமிடத்திற்கு ஏனோக்கு சென்றதாகவும்,[26] ஏனோக்கின் பிரசங்கத்தைக் கேட்டு விழுந்துபோன தூதர்கள் மனந்திரும்பியபோதிலும், ஏனோக்கு அவர்களுடைய மனந்திரும்புதலை ஏற்றுக்கொள்ளவில்லை என்னும் கற்பனைக் கதை உள்ளது (1ஏனோக்கு 13:1-2). மேலும், ஆரம்பகால வேதாகமப் பிரதிகளில் 1பேதுரு 3:19இல் ஏனோக்கின் பெயர் இருந்ததாக இவர்கள் கூறினாலும் இதற்கு எவ்விதமான ஆதாரமும் இல்லை. இதுவும் கி.பி.18ஆம் நூற்றாண்டளவில் உருவாக்கப்பட்ட ஒரு கதையாகவே உள்ளது.[27]

இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் "பாதாளத்திற்குச் சென்றார்" என்னும் பாரம்பரியச் சபைகளின் போதனைக்கு 1பேதுரு 3:18-20ஐ முதற் தடவையாக உபயோகித்தவர் அலெக்சாந்திரியாவைச் சோந்த கிளமன்ட் (Clement of Alexandria AD150-220) என்பவராவார்.[28] எனினும், சுவிசேஷப் பிரசங்கத்தைக் கேட்பதன் மூலமாகவே மனிதரால் இரட்சிக்கப்பட முடியும் என்றால், சுவிசேஷத்தைக் கேட்பதற்கு எவ்வித சந்தர்ப்பமும் கிடைக்காத நிலையில் மரித்தவர்களின் நிலைமை என்ன? என்னும் கேள்விக்கான பதிலாக உருவாக்கப்பட்ட போதனைக்கு ஆதாரமாகவே கிளமன்ட் என்பவர் 1பேதுரு 3:18-20ஐ உபயோகித்தார். இதனால், சுவிசேஷத்தைக் கேட்காமல் மரித்தவர்கள், இயேசுகிறிஸ்துவின் மூலம் அல்லது மரித்த அப்போஸ்தலர்களின் மூலம் சுவிசேஷத்தைக் கேட்பார்கள் என்பதே இவருடைய போதனையாக இருந்தது. மேலும், அலெக்சாந்திரியாவைச் சேர்ந்த ஓரிகன், சிரில் என்னும் சபைத் தலைவர்களும் இப்போதனையை ஏற்றுக்கொண்டதோடு,[29] பிற்காலத்தில் கத்தோலிக்க சபையில் "உத்தரிப்பு ஸ்தலம்" உருவாக்கப்படுவதற்கும் இப்போதனைகள் காரணமாய் இருந்துள்ளன.[30] எனினும், மனிதர் இரட்சிக்கப்படுவதற்கு மரணத்தின் பின்னர் சந்தர்ப்பம் கொடுக்கப்படுவதில்லை என்பதை சுட்டிக்காட்டுபவர்கள், மரித்த நீதிமான்களுக்கு இரட்சிப்பையும் துன்மார்க்கருக்கு ஆக்கினையையும்பற்றிய இறுதி அறிவிப்பாகவே, காவலிலுள்ள ஆவிகளுக்கு செய்யப்பட்ட இயேசுகிறிஸ்துவின் பிரசங்கம் இருப்பதாகக் கருதுகின்றனர்.[31] ஆனால், இரண்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் சில சபைத் தலைவர்கள், இயேசுகிறிஸ்து மரித்தோருக்கு பிரசங்கித்தார் என்று போதிக்கிறவர்களாக இருந்தாலும், பேதுரு நிருபங்களை எழுதிய காலத்தில், இத்தகைய போதனை சபையில் இருந்ததிற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.[32]

---

23 Ignatius, *Letter to the Magnesians*, 9:2, Justin, *Dialogue with Trypho*, 72:4.
24 E.C.S.Gibson, *Thirty-Nine Articles of the Church of England*, p. 159.
25 E.J.Goodspeed, "Some Greek Notes" pp. 91-92.
26 ஆதியாகமம் ஆறாம் அதிகாரத்தை ஆதாரமாக வைத்து, தேவதூதர்களுக்கும் மானிட பெண்களுக்கும் உறவு ஏற்பட்டது என்னும் போதனையும் யூதர்களினால் கற்பனையில் எழுதப்பட்ட கதைகளில் இருந்தே கிறிஸ்தவர்களினால் எடுக்கப்பட்டுள்ளது. ஆனால், தூதர்களில் ஆண் பெண் வேறுபாடோ, இனவிருத்தியோ, பாலியல் ஆசைகளோ இல்லை என்பதை இயேசுகிறிஸ்துவே தெரிவித்துள்ளதினால், தேவதூதர்கள் மானிட பெண்களுடன் உறவுகொண்டார்கள் என்று கூறமுடியாது. இத்தகைய விளக்கம் கற்பனையில் எழுதப்பட்ட கதைகளில் இருந்தே எடுக்கப்பட்டுள்ளது. இதைப்பற்றிய முழுமையான விளக்கத்திற்கு விரைவில் வெளிவரும் "பாவத்தின் ஆரம்பமும் அகோரமும்" என்னும் நூலைப் பார்க்கவும்.
27 B.M.Metzger, *Chapters in the History of New Testament textual Criticism*, pp. 158-159.
28 G.Bray, ed., *Ancient Christian Commentary on Scripture: New Testament Volume 11*, p. 107. Downers Grove IVP, 2000.
29 Origen, *De principiis*, 2.5.3.
30 K.H.Jobes, *1Peter: Baker Exegetical Commentary on the New Testament*, pp. 247-248.
31 J.Calvin, *The Institutes of the Christian Religion*, 2.16.8-9.
32 C.S.Keener, *1Peter: A Commentary*, 271.

ஆதி சபைத் தலைவர்களின் போதனை காரணமாக, சில பாரம்பரியச் சபைகளில் வாரந்தோறும் சொல்லப்படுகின்ற “அப்போஸ்தல விசுவாசப்பிரமாணம்” என்று அழைக்கப்படும் விசுவாச அறிக்கையில் “இயேசுகிறிஸ்து பாதாளத்திற்கு இறங்கினார்” என்னும் ஒரு வாக்கியமும் உள்ளது. இதனால், இயேசுகிறிஸ்து தமது மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆவிகளுக்குப் பிரசங்கம் பண்ணினார் என்னும் போதனை இன்றுவரை நிலைத்துள்ளது. எனினும், இவ்விசுவாசப்பிரமாணம் “அப்போஸ்தலர்களினால் எழுதப்பட்டது” என்னும் அர்த்தத்தில் அல்ல, “அப்போஸ்தலருடைய உபதேசங்களை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டது” என்னும் அர்த்தத்திலேயே “அப்போஸ்தல விசுவாசப்பிரமாணம்” (Apostles' Creed) என்று அழைக்கப்படுகின்றது.[33] மேலும், கிறிஸ்தவர்களினால் உபயோகிக்கப்படும் ஏனைய விசுவாசப்பிரமாணங்கள் “திருச்சபை ஆலோசனைச் சங்கங்களில்” (Church Councils) சபைத் தலைவர்களின் ஆராய்ச்சியில் எழுதப்பட்டு, எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டதுபோல, அப்போஸ்தல விசுவாசப்பிரமாணம் எந்தவொரு சங்கத்தினாலும் எழுதப்படவில்லை. அதுமாத்திரமல்ல, இதிலுள்ள ஒவ்வொரு வாக்கியமும் கி.பி.200 முதல் 750 வரை காலத்திற்குக் காலம் வெவ்வேறு நபர்களினால் சேர்க்கப்பட்டுள்ளது.[34] இதனால்தான், கி.பி.390 வரை “இயேசுகிறிஸ்து பாதாளத்திற்கு இறங்கினார்” என்னும் வாக்கியம் இவ்விசுவாசப்பிரமாணத்தில் இருக்கவில்லை.[35] ஆனால், இவ்வாக்கியம் சேர்க்கப்பட்டபோது, இயேசுகிறிஸ்து மரித்தோரின் ஆவிகள் இருந்த இடத்திற்குச் சென்றார் என்னும் அர்த்தத்தில் அல்ல, அவருடைய சரீரம் அடக்கம் பண்ணப்பட்டது என்னும் அர்த்தத்திலேயே சேர்க்கப்பட்டது. மேலும், பிற்காலத்தில் இவ்வாக்கியத்தை விளக்கும் விதத்தில் “அடக்கம்பண்ணப்பட்டார்” என்னும் வாக்கியமும் விசுவாசப்பிரமாணத்தில் எழுதப்பட்டாலும், காலப்போக்கில் இரண்டு வாக்கியங்களும் இரண்டு அர்த்தங்களுடன் “அடக்கம்பண்ணப்பட்டு பாதாளத்தில் இறங்கினார்” என்று தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டதோடு, இதற்கேற்ற விதத்தில் 1பேதுரு 3:18-20 வியாக்கியானம் செய்யப்பட்டு வருகிறது.[36]

இயேசுகிறிஸ்து தம்முடைய சிலுவை மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில், பழைய ஏற்பாட்டுக்கால பரிசுத்தவான்களின் ஆவிகள் இருந்த இடத்திற்குச் சென்று பிரசங்கிக்கவில்லை என்றால், பேதுரு எதைப்பற்றி கூறுகின்றார் என்னும் கேள்வி நமக்குள் எழலாம். எனினும், நாம் ஏற்கனவே பார்த்த விதமாக, ஆவிக்குரிய நிலையில் இயேசுகிறிஸ்து பிரசங்கம் பண்ணியதைப்பற்றியே 19ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதினால், தற்காலத்தில் பெரும்பாலான ஆராய்ச்சியாளர்கள், இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் பின்னர் நடைபெற்ற ஒரு சம்பவமாகவே இதைக் கருதுகின்றனர். அதாவது, மாம்சத்தில் கொலையுண்டு ஆவிக்குரிய பிரகாரம் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து, அதன்பின்பே காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்ததாக இவர்கள் கூறுகின்றனர்.[37] எனினும் இவர்களில் சிலர், இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த தினம் மகதலேனா மரியாளுக்கு காட்சி கொடுத்த பின்னர் இச்சம்பவம் நடைபெற்றதாகக் கூறுகின்றனர்.[38] ஆனால் ஏனையவர்கள், உயிர்த்தெழுதலுக்கும் பரமேறுத

---

33 D.J.Treier & W.A.Elwell, ed., *Evangelical Dictionary of Theology*, p. 74.

34 W.Grudem, *Systematic Theology: An Introduction to Biblical Doctrine*, p. 586.

35 P.Schaff, *Creeds of Christendom Volume 1*, pp. 21, 46, *Volume 2*, p. 46; A.C.McGiffert, *The Apostles Creed: Its Origin, Its Purpose, and Its Historical Interpretation*, pp. 6-7. New York: Scribner, 1902.

36 W.Grudem, "He did not Descend Into Hell: A Plea for Following Scripture Instead of the Apostle's Creed" In JETS. 34 (1991), pp. 103-113.

37 M.E.Boring, *1Peter: Abingdon New Testament Commentaries*, p. 140; W.J.Dalton, *Christ's Proclamation to the Spirits*, p. 14; P.H.Davids, *1 Peter: The New International Commentary on the New Testament*, pp. 138-141; J.H.Elliott, *1Peter: Anchor Bible Commentary*, pp. 647-652; J.R.Michaels, *1Peter: Word Biblical Commentary Volume 49*, p. 205; E.G.Selwyn, *The First Epistle of St. Peter: The Greek Text with Introduction, Notes, and Essays*, p. 353 New York: Macmillan, 1947. A.M.Stibbs, *1Peter: Tyndale New Testament Commentaries*, pp. 142-143. Eerdmans 1959. A.R.C.Leaney, *Peter and Jude: Cambridge Bible Commentary on the English Bible*, p. 51 Cambridge University Press, 1967. A.J.Bandstra, "Making Proclamation to the Spirits in Prison: Another Look at 1Peter 3:19" In *Calvin Theological Journal*. 38 (2003) pp. 120-124; J.D.Charles, *Peter: Expositors Bible Commentary Volume 13*, pp. 338-342; J.N.D.Kelly, *The Epistles of Peter and Jude: Black's New Testament Commentary*, p. 154; T.R.Schreiner, *1, 2, Peter, Jude: The New American Commentary*, pp. 184-189; S.McKnight, *1Peter: The NIV Application Commentary*, pp. 216-217; C.S.Keener, *1Peter: A Commentary*, p. 273. I.H.Marshall, *1Peter: The IVP New Testament Commentary*, pp. 122-127; D.P.Senior, *1Peter: Sacra Pagina Bible Commentary*, p. 109; B.Witherington, *A Socio-Rhetorical Commentary on 1-2 Peter*, pp. 182-189

38 W.J. Dalton, *Proclamation to the Spirits*, pp. 185-186.

லுக்கும் இடைப்பட்ட காலத்தில், அல்லது, இயேசுகிறிஸ்து பரலோகத்திற்குச் சென்றபோது நடைபெற்ற சம்பவமாக இதை விளக்குகின்றனர்.[39] எனினும், இவர்களும் வேதாகமத்தில் சேர்த்துக் கொள்ளப்படாத யூதர்களுடைய நூல்களை ஆதாரமாகக்கொண்டே, "காவலிலுள்ள ஆவிகள்" விழுந்துபோன தூதர்களான பிசாசின் ஆவிகள் என்றும், இயேசுகிறிஸ்து இவ்வாவிகளுக்குப் பிரசங்கித்ததைப்பற்றியே 1பேதுரு 3:18-20ல் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் வாதிடுகின்றனர்.[40] இதனால்தான், ஏனோக்குவின் புத்தகம் இல்லாமல் பேதுரு இவ்வசனங்களில் எழுதியுள்ளதைப் புரிந்துகொள்ள முடியாது என்று இவர்கள் கூறுகின்றனர்.[41] ஆனால், வேதாகமத்தில் சேர்த்துக் கொள்ளப்படாத நூல்களின் கதைகளை வேதாகமத்திற்குள் புகுத்துவதும், அவற்றை வேதசத்தியமாக அறிவிப்பதும் தவறாகும். மேலும், காவலிலுள்ள ஆவிகள் "பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம் பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்த போது கீழ்ப்படியாமற்போனவைகள்" என்று 20ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதினால், இந்த ஆவிகளை விழுந்துபோன தூதர்களாகக் கருத முடியாது. ஏனெனில் தூதர்களின் வீழ்ச்சி நோவாவின் காலத்தில் அல்ல, அதற்கும் முன்பே, குறிப்பாக ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழுவதற்கும் முன்பே நடைபெற்றுள்ளது. மேலும், 20ஆம் வசனத்தின் இறுதியில் "அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர் மாத்திரம் காக்கப்பட்டார்கள்" என்றும் பேதுரு கூறுவதினால், பேழையில் காப்பாற்றப்பட்டவர்களுக்கும் அக்காலத்தில் கீழ்ப்படியாமற்போனவர்களுக்கும் இடையிலான வித்தியாசத்தையே பேதுரு இவ்வசனங்களில் சுட்டிக்காட்டியுள்ளார் என்பது தெளிவாகிறது. எனவே, பேதுரு குறிப்பிடும் ஆவிகள் "மனிதருடைய ஆவிகளாகவே உள்ளன."[42] ஆனாலும், 20ஆம் வசனம் சுட்டிக்காட்டுவது போல, இவைகள் நோவாவின் காலத்தில் கீழ்ப்படியாதவர்களின் ஆவிகளாகவே உள்ளன.

நோவாவின் காலத்தில் கீழ்ப்படியாமற்போனவர்களின் ஆவிகளுக்கு செய்யப்பட்ட பிரசங்கத்தைப் பற்றியே பேதுரு இவ்வசனங்களில் குறிப்பிட்டுள்ளார் என்றால், உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து எப்படி இவர்களுக்கு பிரசங்கித்திருக்க முடியும் என்று நாம் கேட்கலாம். எனினும், இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்னர் பிரசங்கித்தார் என்று 19ஆம் வசனம் கூறவில்லை. ஏனெனில், நாம் ஏற்கனவே பார்த்தபடி (மூலமொழியின் இலக்கண அமைப்பு முறையின்படி), இயேசுகிறிஸ்து "ஆவிக்குரிய நிலையில் பிரசங்கித்ததாகவே" 19ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், இவ்வசனத்தில் "அந்த ஆவியிலே" என்பது, 18ஆம் வசனத்தின்படி, "ஆவியாயிருக்கும் நிலையையே" குறிக்கின்றது. மேலும், இத்தகைய நிலையில் இயேசுகிறிஸ்து பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளுக்கு ஊடாகப் பிரசங்கிக்கிறவராக இருந்தார் என்பதை நிருபத்தின் முதலாம் அதிகாரத்திலேயே பேதுரு சுட்டிக்காட்டியுள்ளார் (1பேது.1:10-11).[43] அதுமாத்திரமல்ல, நோவாவும் தன்னுடைய கால மக்களுக்குத் தேவனுடைய வார்த்தையை அறிவிப்பவராக இருந்ததாகவும் பேதுரு தன்னுடைய இரண்டாவது நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார் (2பேது.2:5). எனவே, நாம் பேதுருவின் மொழிநடையை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். அதாவது, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளுக்கு ஊடாக இயேசுகிறிஸ்து பிரசங்கிக்கிறவராக இருந்தார் என்பதே பேதுருவின் நம்பிக்கையாக இருந்தது. இதனால்தான், நோவாவின் காலத்தில் கீழ்ப்படியாமற் போனவர்களுக்கே இயேசுகிறிஸ்து பிரசங்கித்ததாகப்

---

39 M.Eaton, *1Peter: Preaching Through The Bible*, pp. 82-83; T.R.Schreiner, *1,2 Peter, Jude: New American Commentary*, p.188-190.

40 D.E.Hiebert, "The Suffering and Triumphant Christ: An Exposition of 1Peter 3:18-22" In *Bibliotheca Sacra*. 139 (1982) pp. 146-158; A.J.Bandstra, "Making Proclamation to the Spirits in Prison: Another Look at 1Peter 3:19" In *Calvin Theological Journal*. 38 (2003) pp. 120-124; W.J.Dalton, "The Interpretation of 1Peter 3:19 and 4:6: Light from 2Peter" In *Biblica*. 60 (1979) pp. 547-555; J.R.Michaels, *1Peter: Word Biblical Commentary Volume 49*, pp. 194-222; I.H.Marshall, ed., *New Testament Interpretations: Essays on Principles and Methods*, pp. 264-281. Eerdmans, 1977. S.McKnight, *1Peter: The NIV Application Commentary*, p. 217; K.H.Jobes, *1Peter: Baker Exegetical Commentary on the New Testament*, pp. 243-244.

41 I.H.Marshall, ed., *New Testament Interpretation: Essays on Principles and Methods*, p. 265.

42 F.W.Beare, *1Peter: Greek Text with Introduction and Notes*, p. 172.

43 1பேதுரு 1:10-11ல் "உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத் தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள். தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்ன காலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பேதுரு குறிப்பிட்டுள்ளார். எனினும், அவர்களைக் "காவலிலுள்ள அவிகள்" என்று பேதுரு கூறுவதே அநேகருக்கு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், பேதுரு இந்நிருபத்தை எழுதும்போது நோவாவின் காலத்தில் கீழ்ப்படியாமற் போனவர்கள் உயிருடன் இராததினால், அவர்களைக் "காவலிலுள்ள ஆவிகள்" என்று பேதுரு குறிப்பிட்டுள்ளார். ஏனெனில், கீழ்ப்படியாமற்போன இவர்கள், துன்மார்க்கரின் ஆவிகள் செல்லும் இடத்தில் இருக்கின்றனர். அங்கிருக்கும் ஆவிகளினால் வேறு எங்கும் செல்ல முடியாது என்பதினால்தான் இவர்களைக் "காவலிலுள்ள ஆவிகள்" என்று பேதுரு வர்ணித்துள்ளார். எனவே, நோவாவின் ஊடாக இயேசுகிறிஸ்து பிரசங்கித்ததைப் பற்றியே 1பேதுரு 3:18-20ல் குறிப்பிடப்பட்டுள்ளது.[44] அதாவது, பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தீர்க்கதரிசிகளுக்கு ஊடாக மனிதர்களோடு பேசும் இயேசுகிறிஸ்து, நோவாவின் மூலம் அவனுடைய காலத்தில் வாழ்ந்த மக்களுக்குப் பிரசங்கித்துள்ளார். இதனால், வேதாகமத்தில் சேர்த்துக் கொள்ளப்படாத கற்பனைக் கதைகளை ஆதாரமாகக்கொண்டு, இயேசுகிறிஸ்து தம்முடைய மரணத்திற்கும் உயிர்த்தெழுதலுக்கும் இடைப்பட்ட காலத்தில், அல்லது உயிர்த்தெழுந்த பின்னர் ஆவிகளுக்குப் பிரசங்கித்தார் என்று 1பேதுரு 3:18-20ஐ வியாக்கியானம் செய்வது, வேதாகமத்தில் சொல்லப்படாத ஒரு காரியத்தை அதற்குள் புகுத்தும் செயலாகவே உள்ளது.

நோவாவின் காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு, நோவாவின் ஊடாக இயேசுகிறிஸ்துவின் ஆவி செய்த பிரசங்கத்தைப்பற்றியே பேதுரு குறிப்பிட்டுள்ளார் என்பதே பேதுரு இவ்வசனங்களில் குறிப்பிடும் விஷயம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவருடைய மொழிநடையை நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியம். இல்லையென்றால், வேதாகம சத்தியத்தையே முரண்படுத்தும் விதத்தில், மனிதர்கள் மரித்த பின்பும் அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுகின்றது என்னும் தவறான கருத்துடையவராகப் பேதுரு இருந்துள்ளார் என்னும் எண்ணமே நமக்கு ஏற்படும். ஏனெனில், பேதுரு இவ்வசனங்களில் மாத்திரமல்ல, நான்காம் அதிகாரத்திலும் மரிதோருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார். அதாவது, ஆறாம் வசனத்தில் "இதற்காக மரித்தோரானவர்கள், மனுஷர் முன்பாக மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருந்தும், தேவன் முன்பாக ஆவியிலே பிழைக்கும்படியாக, அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது" (1பேது.4:6) என்று எழுதியுள்ளார். ஆனால், "மரித்தோருக்கு சுவிஷேசம் அறிவிக்கப்பட்டது" என்று பேதுரு கூறும்போது, மூலமொழியின் இலக்கண அமைப்பு முறையின்படி இவ்வாக்கியம், இப்போது மரித்தவர்களாய் இருப்பவர்களுக்கு, அவர்கள் உயிரோடிருக்கும்போது அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது என்னும் அர்த்தமுடையதாகவே உள்ளது.[45] ஏனென்றால், மரணத்தின்பின் எவருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதில்லை என்பது வேதாகமத்தின் தெளிவான போதனையாய் உள்ளது (எபி.9:27).[46] எனவே, இயேசுகிறிஸ்துவும் மரித்தோரின் ஆவிகளுக்குப் பிரசங்கித்திருக்க மாட்டார். இதனால்தான், பேதுரு இந்நிருபத்தை எழுதும் காலத்தில் மரித்தோருக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது என்று அவர் கூறும்போது, அவர்கள் உயிரோடிருந்தபோது அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதைப்பற்றிக் குறிப்பிடும்

[44] J.S.Feinberg, "1Peter 3;18-20: Ancient Mythology and the Intermediate State" pp. 303-336; W.Grudem, *1Peter: Tyndale New Testament Commentary*, pp. 155-161, 203-239; J.H.Skilton, "A Glance at Some Old Problems in First Peter" pp. 1-9; J.F.Walvoord & R.B.Zuck, ed., *The Bible Knowledge Commentary New Testament*, p. 851; W.Kelly, *Christ Preaching to the Spirits in Prison*, pp. 3-89; P.Patterson, *A Pilgrim Priesthood: An Exposition of First Peter*, pp. 134-146, 195-199; Nashville: Nelson, 1982; G.H.Clark, *New Heavens, New Earth: First and Second Peter*, 130; Jefferson: Trinity Foundation, 1972. M.J.Erickson, "Is There Opportunity for Salvation After Death?" In *Bibliothecs Sacra*. 152 (1995), pp. 131-144; J.S.Feinberg, "1Peter 3:18-20, Ancient Mythology, and the Intermediate State" In *Westminster Theological Journal*. 48 (1986), pp. 3030-336; M.Rydelnik & M.Vanlaningham, ed., *The Moody Bible Commentary*, p. 1963; W.MacDonald, *Believer's Bible Commentary*, p. 2272; St.Augustine, *Lette*r 164, Ch.15-17; T.Aquinas, *Summa Theologica*, Part 3, Question 52, Article 2; R.Leighton, *Commentary on First Peter*, pp. 354-366; Grand Rapids: Kregel, 1972

[45] W.Grudem, *1Peter: Tyndale New Testament Commentaries*, pp. 170-171; J.N.D.Kelly, *The Epistles of Peter and Jude: Black's New Testament Commentary*, 174; T.R.Schreiner, *1, 2, Peter, Jude: The New American Commentary*, p. 208; P.H.Davids, *1 Peter: The New International Commentary on the New Testament*, pp. 153-155; J.H.Elliott, *1Peter: Anchor Bible Commentary*, pp. 733-734; E.G.Selwyn, *The First Epistle of St. Peter: The Greek Text with Introduction, Notes, and Essays*, p. 354; W.J.Dalton, *Christ's Proclamation to the Spirits*, pp. 270-272

[46] எபிரெயர் 9:27இன்படி, மரணத்தின் பின் சுவிசேஷத்தை மறுபடியும் கேட்பதற்கான சந்தர்ப்பம் அல்ல, மனிதருக்கு நியாயத்தீர்ப்பே உள்ளது. இதனால்தான் இவ்வசனத்தில் "ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருப்பதாகக்" குறிப்பிடப்பட்டுள்ளது.

விதத்தில், ‘‘அறிவிக்கப்பட்டது’’ என்னும் சொல்லை இறந்தகாலத்தில் குறிப்பிட்டுள்ளார். இதைப் போலவே, காவலிலுள்ள ஆவிகளுக்குச் செய்யப்பட்ட பிரசங்கமும், மரித்தோருக்கு செய்யப்பட்ட பிரசங்கமாக அல்ல, அவர்கள் உயிரோடிருக்கும்போது அவர்களுக்கு செய்யப்பட்ட பிரசங்கமாகவே உள்ளது. ஆனால், பேதுரு நிருபத்தை எழுதும் காலத்தில் அவர்கள் உயிரோடிராததினால், அவர்களுடைய தற்கால நிலையைக் கருத்திற்கொண்டவராக அவர்களை காவலிலுள்ள ஆவிகளாகக் குறிப்பிட்டுள்ளார்.[47]

[47] W.Grudem, *1Peter: Tyndale New Testament Commentaries*, p.210.